2014 ஜூலை 15]

அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு, தற்போது மக்களுடைய பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. 122 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 25 பணிகள் ஒப்பந்த நிலையிலே இருக்கின்றன. 18 பணிகள் மதிப்பீட்டு நிலையிலே இருக்கின்றன. 5 பணிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, பாலத்தினுடைய தேவையைக் கருதி, அங்கே இருக்கின்ற போக்குவரத்தினுடைய தேவையைக் கருதி, முன்னுரிமை அடிப்படையிலே பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பாலப் பணிகள் குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

137—

கயிறு தொழிற்சாலை

***7144—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் தேங்காய் நார் கயிறு தயாரிக்கும் தொழில் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் ஸ்பூருட்டி (SFURTI) திட்டத்தின்கீழ் ரூ.87.42 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கயிறுக் குழுமம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதன்மூலம் குடியாத்தம் மற்றும் திருப்பத்தூரில் இரு பொது வசதி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருப்பத்தூரில்

ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், கயிறு மெத்தைகள் உற்பத்தி செய்யும் பொது வசதி மையம் நிறுவப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், பலர் படை திரண்டு மோதியபோதும், தனிப் படையாய், தானைத் தலைமை கொண்டு, இந்திய அரசியல் வரலாற்றில் முதன்முறையாக 39 தொகுதிகளில் போட்டியிட்டு 37 தொகுதிகளில் இமாலய வெற்றி பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரசியல் கட்சிகளின் வரிசையில் மூன்றாவது மிகப் பெரிய அரசியல் கட்சி என்ற சிம்மாசன சிறப்பு பெற்றுத் தந்த தாயே, ஏழரை கோடி தமிழ் மக்களின் ஜீவஸ்ருதியே, மலை கலங்கினும், நிலை கலங்காத தன்னிகரற்ற தாயே, கருணைப் பெருங்கடலே, ஆற்றல் அரசால் அரசாளும் ஆராதனைக்குரிய அரசியல் ஞானியே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை தொகுதிகளிலுள்ள ஜவ்வாது மலை, ஏலகிரி மலை அடிவாரங்களில் தென்னை மரங்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் பொருட்டும், அப்பகுதி மக்கள் பயன்பெறும் பொருட்டும், இப்பகுதியில் ஒரு கயிறு திரிக்கும் தொழிற்சாலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தித் தரும்பட்சத்தில் விவசாயத்தினை நம்பி வாழும் மக்கள் பயன் பெற ஏதுவாக இருக்கும் எனத் தெரிவித்து, அதை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜுலை 15]

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் 65 கயிறு உற்பத்தி அலகுகள் உள்ளன. அதிலேயும் தென்னை நார் உற்பத்தியில் 12 அலகுகளும், கயிறு உற்பத்தியில் 8 அலகுகளும் சேர்த்து மொத்தம் 20 கயிறு உற்பத்தி அலகுகள் திருப்பத்தூர் பகுதியிலே உள்ளன. என்றாலும்கூட, அரசின் மூலமாக தொழிற்சாலைகள் துவங்குகிற திட்டங்கள் ஏதுமில்லை. தனியார் தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு அரசினுடைய மானியத்துடன் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தரத் தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக்கொள்ள கயிறு திரிக்கும் தொழிற்சாலை, சுய தொழில் அடிப்படையில் தாங்களாகவே மேற்கொள்ள அரசு சலுகை வழங்கும் திட்டம் ஏதேனும் உண்டா? இத்தொழிலினை மேற்கொள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி ஏதும் வழங்கப்படுகின்றதா? என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தமிழகத்தில் கயிறு வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, பொள்ளாச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட கயிறுப் பொருட்களின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, மொத்தம்*

ரூ.881 இலட்சம் மதிப்பீட்டில் 9 கயிறுக் குழுமங்கள் அமைக்க கயிறு வாரியத்திற்குப் பிரேரணைகள் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது என்பதையும், அதேபோன்று கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் 10.67 கோடி ரூபாயில் கயிறுக் குழுமம், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கயிறு வாரியத்தின் சந்தை மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடர்ந்து சிறப்போடு செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் இதற்காக 2011-2012 ஆம் ஆண்டில் ரூபாய் 53 இலட்சத்து 22 ஆயிரத்து 451 ரூபாயும், 2012-2013 ஆம் ஆண்டில் 58 இலட்சத்து 87 ஆயிரத்து 507 ரூபாயும், 2013-2014 ஆம் ஆண்டில் 65 இலட்சம் ரூபாயும் கயிறு தொழில் சிறப்போடு இருக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியங்களை வழங்கி சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

138—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***34481—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் ஆண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,